தமிழ்நாடு சட்டப்பேரவை

திங்கட்கிழமை, 1972 மார்ச் 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினுக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

செஞ்சியில் தீ அணைப்பு நிலையம்

* 376 வினு—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சியில் ஒரு தீ அணைக்கும் காவல் நிலையம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இந்த வினு எழுவதற்கு இடமில்லை.

காவலர் படையில் பெண்கள்

* 377 வினு—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் பெண்களையும் காவல் படையில் சேர்த்துக்கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, பண்டையத் தமிழ்ப் பெண்டிர் சிறிவந்த புலிகளையெல்லாம் முறத்தினுலேயே அடித்துத் துறத்தியதாகக் கூறப்படுகிறது. அத்தகைய முறையில் வழிவழி வந்த நமது வீரத் தமிழ்ப் பெண்டிர்க்கு இனியேனும் காவல் துறையில் இடம் அளிக்க அரசு முற்படுமா?